"பழமெல்லாம் முழுக்கொட்டை," "உபவாஸம்," "அவனல்லவோ தலைவன்," இவைகளைப் படியுங்கள்.

தமிழ் உலகு

(ஞாயிற்றுக்கிழமைதோறும் வெளிவரும் ஓர் தமிழ்ப்பத்திரிகை.)

S. பட்டாபிராமன், M. A., பத்திராதிபர்.

தொ. 1. | துந்துபி௵ ஆவணி௴ 18௳ (3-9-'22.) | ப. 19.

விஷய அடக்கம்.

1. வர்த்தமானம். 177
2. அவனல்லவோ தலைவன்! 178
3 அவர்களும் நல்லவர்களே! 182
4. உண்மை என்ன? 179
5. அஃதெப்படி? 180
6. ஓர் தவறு 180
7. பழமெல்லாம் முழுக்கொட்டை! 181
—(ஸ்ரீமான் "ராமசந்திரர்" எழுதியது)....
8. ஊக்கத்தின் பெருமை 182
—"ஓர் வக்கணைக்காரன்" எழுகியது
9. உபவாஸம் 183
—"அகத்தியனால்" எழுதப்பட்டது
10. புயற்காற்று. (ஸ்ரீமான் V. நாராயணய்யர், M. A. M. L., எழுதியது)
—மகாகவி டாக்டர். ரவீந்திரநாத் டாகூரின் "ரெக்" என்னும் கதையின் மொழிபெயர்ப்பு.
11. புத்தகங்கள் 185

வர்த்தமானம்

பெங்கால் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலில், பாபு ராய்ஹரேந்திர நாத்சௌத்ரி என்னும் மெம்பர், Mr. லாயிட் ஜார்ஜ் பிரசங்கத்தைக் கண்டிப்பதற்காகவே, மற்ற எல்லா கௌன்ஸில் நடவடிக்கைகளையும் நிறுத்தி விடவேண்டுமென்று கேட்டுக் கொண்டார். ஆயினும் H. E. லார்ட் லிட்டன் அதற்கிணங்கவில்லை. பிரிடிஷ் பார்லிமெண்டில் Mr. லாயிட் ஜார்ஜ் பேசியதைப்பற்றி, பெங்கால் கவர்மெண்டார் சிரமமெடுத்துக்கொள்வது அவசியமாயில்லையென்றே H. E. லார்ட் லிட்டன் சொல்லிவிட்டார்.

உண்மையில், அவ்வுபன்னியாசத்தால் இந்தியர்களுக்குள் இவ்வாறு அதிருப்தியும் இருக்கும்போது, H. E. லார்ட் லிட்டன் செய்திருப்பது ராஜ்ய தந்திரிகளுக்கு அழகாயில்லை.

இங்கிலண்டில் பிரதம மந்திரியாயிருந்த லார்ட் ரோஸ்பரி என்பவர் இனி தனது காலத்தை ஏகாந்தத்திலேயே கழிக்க நிச்சயித்து விட்டதாய்த் தெரிவித்தார். சொத்துக்கள் எல்லாவற்றையும் தன்னுடைய ஜ்யேஷ்ட புத்திரனிடம் ஒப்புவித்து, தன் குடியானவர்களிடமும் இவர் கடைசியாக விடைபெற்றுக்கொண்டு விட்டார்.. இவ்வுலகவாழ்க்கையில் இவர் அனுபவிக்காதது ஒன்றுமேயில்லை.

ரஸத்தைக்கண்டறிந்தவர்கள்தான், உலகத்தையும் துறப்பார்களோ!

லண்டன், ஆகஸ்ட் 23.

இந்தியாவில் I.C.S. இல் உத்தியோகமாயிருந்து, பின் காமன்ஸ் ஸபையில் ஓர் முக்கியமான மெம்பராகவும் பெயர்பெற்ற ஸர். J.D. ரீஸ் சில வாரங்களுக்குமுன் ரயில் வண்டியின் கீழகப்பட்டுக் கொல்லப்பட்டார். அவருடைய "உயில்" படி, 84, 637 பவுன் மதிப்புள்ள தனது ஐசுவரியத்தை வைத்துவிட்டுச்சென்றார். "ரோமன்காதலிக்" மதத்தைச் சார்ந்தவர்களாயிருந்தால், அவர்களுக்குக் கிடைக்கக்கூடியதும் "உயில்" படி பிடுங்கப்பட்டுவிடும்.

மதபேதத்தைப் பாராதவர்கள் யார்?

H. E. லார்ட் ராலின்ஸன் என்பவர்தான் இந்தியாவிலுள்ள சைனியங்களுக்கெல்லாம் அதிபதியாக இருக்கின்றார். அவர் இப்பொழுது தேசமெங்கும் சுற்றுப்பிரயாணம் செய்து வருகையில், இம்மாதம் 26ம்தேதி நீலகிரியிலிருப்பதாய் அறிவிக்கப்பட்டது.

மத்தியமாகாணங்களிலிருக்கும் பிரிடிஷ் ஸிவில் உத்தியோகஸ்தர்கள் இந்தியாமந்திரி லார்ட்பீலுக்குத்தமது குறைகளைத் தெரிவிப்பதற்காக ஓர் பெடிஷன் மிக்கபலமாய் அனுப்பியிருக்கிறார்கள். இதைப்பற்றிப் பிரஸ்தாபம் செய்யும்போது, இங்கிலண்டில் "மார்னிங்போஸ்ட்" பத்திரிகை அவர்கள்பக்கமே வாதிக்கின்றது.

Mr. லாயிட் ஜார்ஜின் சலுகையை அறிந்தபின், இஃதெல்லாம் நமக்கொரு வியப்பாயில்லை.

திருவனந்தபுரத்தில் திவானாயிருக்கின்ற திவான் பகதூர் T. ராகவய்யாவின் சகோதரர், ப்ரொபஸர். T. ஏகாம்பரம், M. A. இங்கிலண்டிலிருந்து வந்துவிட்டார். அங்கே கேம்ப்ரிஜ் யூனிவர்ஸிடியில் செடிகொடிகளுடைய சாஸ்திரத்தில் மேன்மேலும் ஆராய்ச்சிகள் செய்து, Ph. D., பட்டம் பெற்றிருக்கின்றார். அவருக்கு நமது சந்தோஷத்தைத் தெரிவிக்கிறோம்.

மதராஸ் யூனிவர்ஸிடி அதிகாரிகள் அவரை, டாக்டர். ஜகதீச சந்திரபோஸுடன் இந்த சாஸ்திரத்தில் உழைப்பதற்கு, "ஸ்பெஷல் ட்யூடியில்" ஏன் அனுப்பக்கூடாது?

இங்கிலண்டிலுள்ள "மான்சஸ்டர் கார்டியன்" என்னும் பத்திரிகையில், ஸர் ஜகதீச சந்திரபோஸ்

"மரங்களும் எவ்வாறு பூமியிலிருந்து ஜலத்தை இழுத்துக் கொள்கின்றன," என்று ஓர் பெரிய வியாசம் எழுதியிருப்பதைப்பார்க்கப்பெருமையடைகின்றோம். இவ்விஷயத்தை நூறுவருஷகாலமாய், மேல்நாட்டு "ஸையன்டிஸ்ட்ஸ்"கள் ஆராய்ந்து பார்த்தும், அவர்களுக்கொன்றும் புலப்படவில்லை. அவர் கண்டு பிடித்திருக்கும் விஷயங்கள் அபாரமாகவே காணப்படுகின்றன. அதை ஒருவாறு இப்பத்திரிகையிலும் அடுத்த பகுதியில் எடுத்தெழுதப்பட்டிருப்பதை நமது நேயர்கள் காணலாம்.

உலகமெங்கும் கொண்டாடப்பட்டுவரும் டாக்டர் J.C. போஸை இம்மதராஸ் யூனிவர்ஸிடியில் அழைத்தாலென்ன ?

அடுத்த அக்டோபர் மாதம், இந்நகரத்தில் டாக்டர். ரவீந்திர நாத் டாகூர் வந்திருந்து மூன்று உபன்னியாசங்கள் செய்யப் போவதாய் அறிவிக்கப்படுகின்றது. "டிகெட்"கள் Y. M. C. A., யில், Mr. W. ஹிண்டில் என்பவரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். இதில் கிடைப்பதெல்லாம், விசுவபாரதி யென்ற, அவர் ஸ்தாபித்திருக்கும் ஸர்வகலாசாலையின் நிமித்தமே உபயோகப்படுத்தப்படும்.

லண்டன், ஆகஸ்ட் 27.

ஐரோப்பிய மகாயுத்தத்தைப்பற்றி Mr. லாயிட் ஜார்ஜ் ஒருபுஸ்தகம் எழுதிவிட்டதாய் சொல்லப்படுகின்றது. அதிலிருந்து லக்ஷம் பவுனுக்கு மேலாகவே லாபம் கிடைக்குமென்றும், மேலும் அப்பணம் முழுமையும் யுத்தத்தில் தாக்கப்பட்டவர்களுக்காகவே செலவழிக்கப்படுமென்றும், ராய்டர் அதிகாரிகள் தெரிவிக்கின்றார்கள்.

சம்பாதிக்கவும், அனுபவிக்கவும், துறக்கவும், இறக்கவும் இக்காலத்தில் மேல்நாட்டாரே நன்றாய் அறிந்திருக்கிறார்களல்லவா?

காலஞ்சென்ற தாதாபாய் நௌரோஜியின் ஞாபகார்த்தமாய், பம்பாய் நகரத்தில் ஓர் பிரதிமையைவைக்கத்தீர்மானித்து விட்டதாக அக்கமிட்டி மெம்பர்கள் அறிவிக்கின்றனர். இதுவரையில் 84000ரூபாய் அவர்கள் சேர்த்துவிட்டதாகவும் தெரியவருகின்றது.

நமது தேசத்திற்காகப் பாடுபட்டு உழைத்தவர்களுக்குள் தாதாபாய்தான் முதன்மையாய் நிற்பவர். இந்தியாவின் வறுமையைப்பற்றி அவர் எழுதியவையெல்லாம் இன்றைக்கும் உண்மையாகவே இருக்கின்றன.

பம்பாய் நகரத்தின்கண் நாஷனல் மெடிகல் காலேஜ் ஒன்று நடத்தப்படுகின்றது. அதில் 230 பெயர்கள் வைத்தியம் கற்றுவருகின்றனர். கட்டிடத்திற்காக ஐந்துலக்ஷரூபாய் வேண்டுமென்றும், மேலும் உடனே 50000 ரூபாய் அவசியமாயிருக்கும் சில செலவுகளுக்காக, யாரேனும் கொடுத்து உதவவேண்டுமென்றும் டாக்டர் ஸதேய் பிரார்த்தித்தார்.

ஸேத் சோடாணியும் மகமதியர்களெல்லோரும் இக்காலேஜை ஆதரித்துவரவேண்டுமெனச் சொன்னதுடன், ஆயிரம் ரூபாய் நன்கொடையளித்திருக்கின்றார். இக்கலாசாலையில் சம்பளமில்லாமலே ப்ரொபஸர்கள் வைத்தியம் கற்பித்துவருகிறார்கள்.

சென்னைவாசிகள் மாத்திரம் ஏன் உறங்குகின்றனர்?

இந்தியா லெஜிஸ்லெடிவ் அஸெம்ப்ளியில், Mr. கபீருதீன் என்னும் மெம்பர் மகாத்மா காந்தியை சிறையிலிருந்து உடனே விட்டுவிடவேண்டுமென்று ஒருதீர்மானத்தைக் கொண்டுவரபோகிறார்.

இந்தியா கவர்மெண்டாரும், மாகாத்மா காந்தியே தானேகாந்தத்தை நாடுவதாய்ச்சொல்லியிருக்கின்றபடியால், அவருடைய விருப்பத்திற்கு மாறாக அவரை ஜெயிலிலிருந்தும் விட்டுவிடுவார்களா?

பாட்னா, ஆகஸ்ட் 28.

கயாவில், காங்கிரஸ் வரவேற்பு கமிட்டியார் பாபுசித்தரஞ்சன தாஸையே இவ்வருஷம் ப்ரெஸிடெண்டாகத் தேர்ந்தெடுத்துவிட்டார்கள்.

G. I. P. Ry., E. I. Ry., இவ்விரண்டு ரயில்வே கம்பெனிகள் சம்பந்தமாய், சாசனபத்திரத்தில் குறிப்பிடப்பட்ட காலம் முடிந்தவுடன், இவைகளை இந்தியா கவர்மெண்டார் தமது ஆதீனத்தில் இனி நடத்தவேண்டுமென்றே நமது பம்பாய் வர்த்தகர்கள் வற்புறுத்துகிறார்கள்.

இந்தியா லெஜிஸ்லெடிவ் அஸெம்ப்ளியிலும், காமத் என்பவர் ரயில்வே அதிகாரங்களனைத்தும் இனிமேல் இந்தியா கவர்மெண்டார் தாமே ஏற்றுக்கொள்ளவேண்டுமென முறையிடப் போவதாய்த் தெரிகின்றது.

டேராடூனில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் மிலிடெரி காலேஜில் இந்திய வாலிபர்கள் எல்லா அம்சங்களிலும் மிக்கத் திருப்திகரமா யிருக்கிறார்களென்று "லண்டன் டைம்ஸ்" பத்திரிகை கூறுகின்றது. வெகு புத்தி நுட்பத்துடன் எதையும் படித்தறிந்துகொள்ளும் திறமை வாய்ந்தவர்களென்றும், தவிர மிகுந்த ஊக்கத்தோடும், அக்கறையோடும் தமது வேலையை ஒழுங்காய்ச்செய்து முடித்துவிடுகிறார்களென்றும் இப்பத்திரிகைத் திருப்தியடைகின்றது.

இந்தியர்களெனில் ஸகலமும் ஆச்சரியம்தான் !

டாடா ஸ்டீல் கம்பெனியில், "ஷேர் ஹோல்டர்களுக்கு" நூற்றுக்கு நான்கு வீதம் "டிவிடெண்ட்" அளித்திருப்பதாய் சமாசாரம் வெளியாகி இருக்கின்றது.

ஸ்ரீமான் C.ராஜகோபாலாசாரியார், சேலத்தில், ஜ்வரத்தால் அசௌக்கியமாயிருக்கிறார். அதனால் தான், சட்டமறுப்பு கமிட்டி விசாரணைக்கு அவரால் கல்கத்தாவுக்குப் போகமுடியவில்லை.

அவனல்லவோ தலைவன் !

பங்காளத்தில் பாபு சித்தரஞ்சன்தாஸ் ஜெயிலிலிருந்து விடுதலையடைந்துவிட்டாரென்னும் விஷயத்தை எல்லோரும் நன்கு அறிந்திருப்பார்கள். அவர் கல்கத்தாவிலுள்ள பையன்களுக்கு மிகவும் வியக்கத்தக்கவாறு ஓர் உபன்னியாசம் செய்திருக்கிறார். அதை நாமிங்கே எடுத்தெழுதுகின்றோம்.

"பங்காளத்தில், சிறுவர்கள் தேச சம்பந்தமாய்த் தமது கடமையை நிறைவேற்றுவதில்லையென்றும், அவர்கள் முற்றும் ஸ்வயநலம் பாராட்டிவருபவர்களென்றும் சொல்லுகிறார்கள். ஆயின், ஒருநாள், உங்கள் மனதில் குடிகொண்டிருக்கும் சிரேஷ்டமான எண்ணங்களெல்லாவற்றையும் காரியத்தில் நடத்திக்காண்பிக்கமுடியுமென்று நினைக்

கின்றேன். மற்றவர்களைப்பார்க்கிலும் இந்நாட்டில் சிறுவர்கள்தான் அபாரமாகத் தியாகம்செய்தவர்கள் ஆவார்கள். உங்களைப்போல, நாங்கள் என்ன செய்துவிட்டோம்?”

இவ்விடத்தில் அவரது கண்களில் கண்ணீர் தாரைதாரையாய்ப் பெருகிற்று. மேல் பேசவும் அவரால் முடியவில்லை.

“பெங்காலி பையன்கள் எவ்வாறு தீரர்களாக நடந்திருக்கிறார்களென்பதை நான் தெரிந்துகொண்டேன். அன்னாகாரமில்லாமல், எவ்விதத்துன்பங்களுக்கும் ஆட்பட்டும், தேச கைங்கரியத்திற்காகவே அவர்கள் முனையோடு முன்நின்று உதவி புரிந்திருக்கிறார்களல்லவா? முதலில் உங்களுடைய ஒத்தாசையை நான் நாடியபொழுது, என் வார்த்தைகளுக்கிணங்க, சிறுவர்களுள் ஒருவரேனும் இந்தியாவின் நிமித்தம் உழைப்பதற்காக முன்வருவது முடியாததென்றே பலர் நினைத்ததுண்டு. ஆயின், அப்போது நான் அதை நம்பவில்லை. நான் நினைத்தபடியே ஆயிரக்கணக்காகவும் பையன்கள் திரண்டுவந்தார்கள்.”

* * * *

“பையன்கள் படிப்பதே முக்கியமென்றும், மேலும் அதுதான் அவர்களுடைய கடமையென்றும் சிலர் சொல்லுகின்றனர். ஆகிலும் நான் உங்களை ஒரு விஷயத்தைப்பற்றிக் கேட்க விரும்புகிறேன். படிப்பென்றால், பகட்டான ஆடை ஆபரணங்களைப்போல, அதுவும் ஒன்றாகுமா? தாய்தந்தையரிடம் பக்தியையும் விசுவாசத்தையும் பையன்களுக்கு அளிக்கக்கூடாததோர் படிப்பால் பலனென்ன? நமது பாரத நாட்டின் மீது பற்றுதலை நமக்குக் கொடுக்கமுடியாததோர் படிப்பாலும் பிரயோஜனமென்ன? நமது கல்வியைக்கொண்டு நம்மைப் படைத்தவனிடம் முழு நம்பிக்கையையும் நாம் அடையாமலேயிருப்போமாயின், அக்கல்வியும் நமக்கெதற்காக? இவ்விதமான பலன்களொன்றையும் நமக்குக்கொடுக்காத பக்ஷத்தில், அப்படிப்பு நமக்கொருபோதும் அவசியமில்லை. ஹிருதயத்தைப் பெருகச்செய்வதுதான் கல்வியெனக் கொண்டாடத்தக்கது. ஸாஹித்யம், வேதாந்தம், கணிதம், ஸையன்ஸ்,—இவைகளெல்லாம் எதற்கு உதவும்? ஸையன்ஸாலும், கணிதத்தாலும், வேதாந்தத்தாலும், ஸாஹித்தியத்தாலும், நமக்கென்ன ஞானம் உதிக்கக்கூடும்? ஈசுவரனுக்கு முன் புருஷர்களென உங்களால் கம்பீரத்தோடு நடக்கமுடியாமல், நீங்கள் துன்பமடைவீர்களேயாகில், பின்பு அப்படிப்பை எறிந்துவிடுவதில் என்ன ஆக்ஷேபணைகள் இருக்கமுடியும்?”

இதை நமது நண்பர்கள் மிக்க ஆவலோடு படிப்பார்கள். பங்காளத்திலுள்ள சிறுவர்களைப்பற்றி பாபு சித்தரஞ்சன்தாஸ் இவ்வாறு கூறியிருப்பது நமக்கெவ்வளவு பெருமையாக இருக்கின்றது! மகாத்மா காந்தியைப் போன்றவர்கள் தேசத்தின் க்ஷேமத்திற்கென்று கஷ்டப்படுவதில் ஆச்சரியமில்லை. சிறுவர்கள் செய்யும் தியாகமே மிகவும் புகழத்தக்கது. அதையும் கவனிப்பவர்கள்தான் நாட்டிலும் தலைவர்களாயிருக்கத் தகுதியுள்ளவர்களாவார்கள்.

உண்மை என்ன?

பிரிடிஷ் பார்லிமெண்டில், பிரதம மந்திரியாகிய Mr. லாயிட் ஜார்ஜ் இந்தியா சம்பந்தமாய்ப்பேசி முடித்தபின், கர்னல். வெஜ்வுட் நமக்காகவே அவரது வார்த்தைகளைக் கண்டித்தாரென இப்பத்திரிகையில், (இன்று) மற்றொரு இடத்தில், விபரமாக எழுதியிருக்கின்றோம். Mr. லாயிட் ஜார்ஜ் பேசியது, பிரிடிஷ் மந்திரிகள் முன்பு அளித்த வாக்குத்தத்திற்கு முற்றிலும் விரோதமாய் இருக்கின்றதென்றும், மேலும் ஒரு தேசத்தின் கைங்கரியத்திற்காகத்தான் அதிலுள்ள ஸிவில் உத்தியோகஸ்தர்களும் ஏற்பட்டிருக்கிறார்களேயல்லாமல், அவர்களுக்கென்று, இம்முப்பதுகோடி ஜனங்களுடைய லாபலோபங்களை அவ்வாறு அவர் முழுவதும் நிராகரித்துப்பேசுவது அதர்மமென்றும், கர்னல் வெஜ்வுட் நிரம்பவும் தைரியத்துடன் நமக்குப் பரிந்தே பேசியிருக்கின்றார். இந்தியர்கள் விஷயத்தில் சிறிதேனும் அக்கரை பாராட்டிவருபவர்கள் அக்காமன்ஸ் ஸபை மெம்பர்களுக்குள் கிடைப்பது அரிதாய் இருக்கும்போது, கர்னல். வெஜ்வுட் பெருந்தன்மை நம்மால் மிகவும் கொண்டாடப் படத்தக்கதென்பதில் சந்தேகமேயில்லை. ஆகிலும், இவர் சொல்லியிருக்கின்ற சில விஷயங்கள் சற்றும் பொருத்தமில்லாதவையாகவே நமக்குத்தோன்றுவதுமன்றி, அவைகளுக்கு சிறிதும் ஆதாரமும் இல்லையென்று எண்ணுகின்றோம். இவர் கூறியதாவது :—

“பிரிடிஷ் பார்லிமெண்ட் மெம்பர் ஒருவர் இப்பொழுது செய்து முடித்திருக்கும் பிரசங்கமானது இந்தியாவிலுள்ள பத்திரிகைகளில் எல்லாம் மிக்க ஆவலோடு எங்கும் பகிரங்கம் செய்யப்படும். Hon. மெம்பருடைய அபாரமான புத்தியையும், சாமர்த்தியத்தையும் விளம்பரம் செய்வதற்காகவா?——இல்லை, இல்லை. பின்பு, எதற்கென்றால், காமன்ஸ் ஸபை மெம்பர்களுள் ஒருவரானவர் இந்தியர்களைப்பற்றி எவ்வளவு குரூரமாகவும் பேசுகிறார் என்பதைக்காட்டவே, அவருடைய அவ்வுபன்னியாசத்தைத் தமிழ், தெலுங்கு, உருது, பெங்காலி முதலிய பாஷைகள் எல்லாவற்றிலும் குதர்க்கம் செய்வார்கள். இப்படித்தான் இந்தியாவின்கண் கொஞ்சமேனும் தாக்ஷிண்யமற்றவர்கள் (Extremists) பிரஜைகளுடைய மனதைக் கலைத்துவிடுகின்றனர். இந்தியாவில் நான் இருந்தபோது அவர்களுக்கு என்னிடத்தில் ஒருவிதத்திலும் பற்றுதலில்லையென்பதை நான் கண்டறிந்திருக்கின்றேன். இங்கேயும் அவ்விஷயம் மெம்பர்களனைவருக்கும் நன்றாய்த்தெரியும். இந்தியர்களுக்கும் ஆங்கிலேயர்களுக்குமுள்ள மனஸ்தாபங்களை அகற்ற நாம் யாரேனும் யத்தனம் செய்வோமாகில், பிறகு நம்மைத்தான் இவ்விரக்கமற்றவர்கள் (Extremists) துவேஷிக்கின்றார்கள். இந்தியா சம்பந்தமாக என்னைப்போலவே அவ்வளவாகப் படித்தறிந்தவர்களுக்கு இதின் உண்மை தெளிவாய் விளங்கும்.”

கர்னல். வெஜ்வுடும் இப்படிப் பேசுகின்றார்! இது உண்மையா? இந்தியருக்கும், பிரிடிஷாருக்கும் ஸௌஜன்யமிருக்கக்கூடாதென்று யார் சொன்னார்கள்? “எக்ஸ்டிரிமிஸ்ட்ஸ்” என்பவர்கள் நிஜமாகவே அப்படிப்பட்ட விஷமபுத்தியுள்ளவர்களா? அவர்களைப்பற்றியும் ஸ்ரீமான் T. V. சேஷகிரி அய்யர் சமீபத்தில் சொல்லியிருப்பதை நாம் வேறொரு இடத்தில் எழுதியிருக்கிறோம். அதைப் படித்துவிட்டு, அவர்களிடத்தில் அவ்வளவு விஷமும் இருக்கக்கூடுமோவென்று ஆச்சரியப்படுவீர்கள்.

அஃதெப்படி ?

பார்லிமெண்டில், Mr. லாயிட் ஜார்ஜ் இந்தியா சம்பந்தமாகப்பேசிமுடித்ததும், கர்னல். வெஜ்வுட் நமக்காகவும் பரிந்து தைரியத்தோடு அவரைக் கண்டித்தாரென்றும் சொல்லியிருக்கின்றோம். இப்பொழுது காமன்ஸ் ஸபையில் மெம்பர்களாயிருப்பவர்கள், பெரும்பாலும், இந்தியர்களது விஷயத்தில் அனுதாபமற்றவர்களாகவே இருப்பதால், கர்னல். வெஜ்வுட் இத்தருணத்தில் பின்வருமாறு பேசியதற்காக நாம் சந்தோஷமடையவேண்டும்:

"என்ன கெட்ட காலத்திற்குப் பிரதம மந்திரியும் இப்படிப் பேசினரோ,——அது எனக்குப் புரியவில்லை. இப்பொழுது அவர் சொல்லியிருப்பதற்கும், 1917இல் பிரிடிஷ் மந்திரிகள் இந்தியா விஷயமாய் எடுத்துக்கொண்ட விருதத்திற்கும், என்ன பொருத்தமிருக்கின்றது? இந்தியாவின மீதுள்ள நமது பற்றுதலையும் பொறுப்பையும் நாம் என்றைக்கும் விட்டுவிட நினைத்ததில்லையென்றே கூறியிருக்கிறார். சரி, இருக்கட்டும். ஆகிலும் அவருடைய எண்ணம் எனக்கு நன்றாய்ப் புலப்படவில்லை. கானடா, ஆஸ்ட்ரேலியா, இவைகளைப்போலவே, இந்தியாவுக்கும் ஸ்வய ஆக்ஷி ஸ்வதந்திரத்தை நாளடைவில் முழுவதும் அளிப்பதே அவருடைய உத்தேசமாக ஒரு காலத்தில் இருக்கவில்லையா? 1917ம் வருஷத்திலும் அப்படித்தான் அவரே சொல்லியிருக்கின்றார் அல்லவா? பின்பு, அவ்விருதம் உண்மையேயாகில், அப்பற்றுதலையும், பொறுப்பையும், நம்மிடமிருந்து, அவர்களிடத்திலேயே நாம் எப்படியும் கடைசியில் ஒப்புவிக்கவேண்டுமே யல்லாது, நாம் என்ன பண்ணக்கூடும்? இந்தியாவிலுள்ளவர்கள் நாளைய தினம் பிரதம மந்திரியாருடைய உபன்னியாசத்தைப் படித்ததும், அதற்கென்ன அர்த்தமென்றே கலங்குவார்கள். I. C. S. இல் இருக்கும் ஆங்கிலேயர்களது கௌரவமும் அதிகாரங்களும் எப்பொழுதும் சிறிதேனும் குன்றாமலே வைக்கப்படுமென்று Mr. லாயிட் ஜார்ஜ் வற்புறுத்தி யிருக்கின்றார். ஸிவில் ஸெர்விஸ் உத்தியோகஸ்தர்கள் இந்தியாவில் இப்படியே இருப்பதென்றால், இந்தியர்களுக்கு ஸ்வராஜ்யமும் எங்கிருந்து, எப்படி வரமுடியும்? * * * * ஸிவில் ஸெர்விஸிலுள்ள ஆங்கிலேயர்கள் திருப்தியுடன் இருப்பது அவசியமென்பதை ஒத்துக்கொள்ளுகிறேன். ஆகிலும், அவ்வளவாக இதுவும் ஓர் பெரிய விஷயமல்ல. இந்தியாவில் எங்கும் அமைதியும் ஆனந்தமும் இந்தியர்களுக்குள் குடிகொண்டிருக்கவேண்டுமென்பதே இதைப்பார்க்கிலும் மிகவும் முக்கியமாயிருக்கின்றது. இருவர்களைத்தவிர, காமன்ஸ் ஸபை மெம்பர்களெல்லோரும் I. C. S. இல் இருக்கும் பிரிடிஷ் அதிகாரிகளைப்பற்றியே பேசியிருப்பது அழகாயில்லை. ஒரு தேசத்தின் கைங்கரியத்திற்காகவே ஸிவில் உத்தியோகஸ்தர்களும் ஏற்பட்டு இருக்கிறார்களேயல்லாமல், அவர்களுக்காக இந்தியாவென்னும் தேசமும் சிருஷ்டிக்கப்பட்டதோ?"

இவ்விஷயத்தில், கர்னல். வெஜ்வுட் இவ்வாறு பேசி யிருப்பதற்காக, நாம் அவரைக் கொண்டாடவே வேண்டும்.

ஓர் தவறு.

அன்றையதினம் பேசும்போது, கர்னல். வெஜ்வுட், மற்றொரு இடத்தில், மகாத்மா காந்தி கக்ஷியிற் சார்ந்தவர்களைப்பற்றியும் சில வார்த்தைகள் சொல்லியிருக்கிறார். அவைகளை நமது நண்பர்கள் கவனத்தோடு படிக்கலாம்.

"இந்திய விவகாரங்களில் ஆவலோடு அக்கரை பாராட்டி வருபவர்கள் ஊகிப்பதுபோலவே, பிரிடிஷ் பிரதம மந்திரியும், Mr. காந்தி பக்கத்தார் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில்களிலும் வந்துவிடுவார்களென்று எச்சரித்திருக்கின்றார். என்னுடைய அபிப்பிராயத்தில், அவர்கள் Mr. காந்தியின் ஆணைகளுக்கிணங்கியே சட்ட சபைகளிலுள்ள ஸ்தானங்களையும் அபேக்ஷித்து நிற்காமல், ஒதுங்கியிருந்தது ஓர் பெரிய பிசகுதான்.

* * கௌன்ஸில்களிலும் ஒத்துழையாமைக்காரர்கள் எளிதாய் நுழைந்து, இந்தியா கவர்மெண்டாருக்குக் கொஞ்சங்கூட இணங்காமல், எதிர்த்தும் வருவார்களேயாகில், அப்போது இந்தியா சீர்திருத்த சட்டமும் பாழாகப் போய்விடுமென்றே Mr. லாயிட் ஜார்ஜ் வற்புறுத்தினர். ஆகிலும் லேபர் மெம்பர்கள் அப்படி நினைக்கவில்லை. (இப்பார்லிமெண்டிலுள்ள) லேபர் கக்ஷியார், என்றைக்கும், இந்தியர்களெல்லோரும், லெஜிஸ்லெடிவ் கௌன்ஸில்களிலும் அஸெம்ப்ளியிலும் திரண்டுவந்து, கவர்மெண்டாரை எதிர்த்தே ராஜ்யபாரம் வகிப்பதற்கும் கற்றுக்கொள்ளவேண்டுமென முறையிட்டிருக்கின்றனர். அதில் ஒன்றும் பயப்படுவதற்குக் காரணமில்லை. இம்மாதிரியே எல்லா தேசங்களிலும் ஜனங்கள் தம்மைத்தாமே ஆளவும் ஆரம்பம் செய்துவந்திருக்கிறார்கள். அஃதல்லாமல், ஒத்துழையாமைக்காரர்களை Mr. லாயிட் ஜார்ஜ் இவ்வாறு மிரட்டியிருப்பது மிகவும் விசனிக்கத்தக்கதே. இந்தியாவுக்கு வாக்களித்தபின், பிரிடிஷ் கவர்மெண்டார் மறுபடியும் புரளுவார்களேயாகில், அதனால் பெருத்த தீமைகள்தான் விளையக்கூடும்."

மகாத்மா காந்தியின் ஆஞ்ஞைகளுக்குக் கீழ்ப்படிந்து, இந்தியர்களில் மிக்கக்கியாதி பெற்றவர்களும் சட்டசபைகளிலிருந்து ஒதுங்கி நின்றுவிட்டது தவறென்றே கர்னல் வெஜ்வுட் சொல்லுகின்றார். ஆயின் நாம் அப்படி நினைக்க முடியவில்லை. முதன்முதலில், சட்டசபைகளுக்குள் "மாடரெட்"களே எங்கும்புகுந்து, அவர்கள் எவ்வளவுதான் வணக்கத்தோடும் மரியாதையோடும் மன்றாடியே வந்திருக்கிறார்களாயினும், கவர்மெண்டார் அவர்களிடமும் ஒரே விதமாகவே நடந்திருப்பதை நாம் காண்கின்றோம். முற்றிலும் ஆரம்பத்திலேயே, நிரம்பவும் நிதானத்துடன் பழகுபவர்களும் எதையும் சாதிக்கத் திறமையற்றுக் கிடப்பது நமக்கோர் படிப்பாகும். அவர்களால் சைனியச் செலவைக் குறைக்க முடிந்ததா? ரெயில்வே பிரயாணிகளுக்கு அவர்கள் சௌகரியங்கள் செய்து வைக்கக்கூடுமா? 100இல் 93 பெயர்களுக்கும் எழுதப்படிக்கத் தெரியாது இருக்கும்போது, இந்தியா கவர்மெண்டாரை இந்தியர்களது படிப்பின் நிமித்தம் செலவு செய்யவும் அவர்கள் தூண்டமுடியவில்லையென்பது தெளிவாயிருக்கின்றது. பின்பு, கௌன்ஸில்களிலும், "மாடரெட்"களால் செய்யமுடியாத காரியங்களையும் முடித்துவைக்க மகாத்மா காந்தி பக்கத்தார் வெகு சீக்கிரத்தில் நுழைய வேண்டும்.

பழமெல்லாம் முழுக்கொட்டை.

[இது "மாமாம்பழ"த்தின் தொடர்ச்சி. அதில் வந்திருக்கும் மந்தன், மகிழன், ஏகாந்தன், மந்தாகினி முதலானவர்களே இக்கதையிலும் கொண்டு வரப்பட்டிருக்கிறார்கள்.— பத்திராதிபர்.]

நான் நதிக்கரையிலுள்ள மண்டபத்தில் ஒருமூலையில் படுத்து இளைப்பாறுகையில், தென்திசையிலிருந்து இரண்டு சிறுவர்கள் வாடிய முகத்தோடும், கண்களில் நீர் ததும்ப, மண்டபமடைந்தார்கள். அவர்கள் நான் மதில் மறைவிலிருப்பதைப் பார்க்காமல், "இங்கு ஒருவருமில்லை; நம் மனக்குறைகளைச் சொல்லி, ஆற்றிக் கொள்ளலாம்," என்றார்கள். ஒருவன் மற்றொருவனை நோக்கிப் பின்வருமாறு சொன்னான்:—

"ஏன், மகிழா,—இப்பொழுது நமக்குத் தாய் தந்தையரால் அளிக்கப்பட்ட மாம்பழத்தின் தன்மை இப்படிப்பட்டதென்று தெரிந்துவிட்டதே! முன்னம் ஏகாந்தன் சொல்லியபடியேதானிருக்கின்றது. ஆனாலும் அவன் வீட்டை விட்டு வெளியே துரத்தப்பட்டதால், இதின் உண்மை விஷயம் அவனுக்கு நிச்சயமாகத் தெரியாது. ஆகையால் அவனிடத்தில் இந்த சங்கதியை வெளிப்படுத்தாமலிருக்கவேண்டும். அவன் நம்மைக் கண்டால், கட்டாயமாய் இதைப்பற்றிக் கேட்காமலிருக்கமாட்டான். நாம் தக்கபடி பதில் சொல்லவேண்டும்," எனவே,

மற்றொருவன், "மந்தா, நீ சொல்வது சரிதான். ஆனால் ஏகாந்தனுடைய புத்தி நுட்பத்தை நீ நன்றாய் அறியவில்லை போலும். நாம் மாம்பழம் வரப்போகிறதென்று சொன்னவுடனே, அது மாமாம்பழமென்று சொல்லிவிட்டான். அவனுக்கு இவ்விஷயங்கள் எப்படியோ சுபாவமாகவே தோன்றிவிடுகின்றன. அவனிடத்தில் மறைத்துப் பேசுவதில் பயனில்லை. உண்மையைச் சொல்லி, இதற்குச்செய்யவேண்டிய உபாயம் கேட்டால், தடையன்றியில் சொல்வான். ஆகவே, அவனைக் கண்டபொழுது இப்பிரஸ்தாபம் செய்வது நலமென நினைக்கின்றேன்."

இவ்வாறு இவர்கள் பேசிக்கொண்டிருக்கையில், வடதிசையிலிருந்து ஒரு வாலிபன், முகத்தில் புன்னகை விளங்க, மெதுவாய் நடந்து வந்து, மண்டபமடைந்து, அங்கிருந்த சிறுவர்களையும் பார்த்து,

"என்னருமைத் தம்பிமாரே, நீங்கள் இவ்வாறு முகம் வாடிக் கலக்கமுற்றிருப்பதற்குக் காரணமென்ன? நான் சொல்லியபடி பழம் மாமாய்விட்டதோ? இன்னமும் கனியவில்லையோ? உங்கள் முகக் குறிப்பினால் பழம் மாமானதும் அல்லாது, இன்னுமதிகமான கெடுதி நேரிட்டிருப்பதாகத் தோன்றுகின்றதே! என்னிடத்தில் கொஞ்சமேனும் கூசாது சொல்லுங்கள். என்னை வீட்டை விட்டுத் துரத்தியதுபோல, உங்களையும் துரத்திவிட்டார்களா என்ன? அவர்களிடத்தில் உங்களுக்குள்ள அன்பு காரணமாக, உங்களை அவ்வாறு செய்யமாட்டார்களென்று நான் நினைக்கிறேன். நீங்கள் உற்ற குறைகளைச் சொல்லி, என் மனத்துயரை மாற்றுங்கள்."

மந்தன்: "அண்ணா, நீங்கள் சொல்லியது சரியாய்விட்டது. நானும், தம்பி மகிழனும் மோசம் போய்விட்டதாகவே எண்ணுகிறேன். பழத்தை எங்களிடம் பெற்றோர்கள் ஒப்புவைத்த காலத்தில், அது பழுப்பதற்கு சிலகாலம் செல்லுமென்றும், அதுவரையிலும் நாங்களதைக் காப்பாற்ற வேண்டுமென்றும் சொல்லியிருந்தார்கள். அதை நம்பி அப்படியே பாதுகாத்து வந்தோம். இவ்வளவு நாளாகியும், பழம் கைக்குக் கொஞ்சமேனும் நைவு காட்டாததைக் கண்டு சந்தேகித்து, தாயாரிடத்தில் மகிழனைக் கேட்கச் சொன்னேன். அவன் கேட்டபொழுது வெளியான விஷயங்கள் நிரம்பவும் ஆச்சரியகரமானவை. ஏன், மகிழா,—நடந்ததைச் சொல்லேன்!"

மகிழன்: "அன்னை மந்தாகினியிடத்தில் இதைப்பிரஸ்தாபித்தபொழுது, அவளும், 'இது மாமாம்பழமென்று ஏகாந்தன் பேச்சைக்கேட்டு மயங்காதீர்கள். இது சுவேத வனத்தில் ஐந்நூறு வருஷம் வயதுள்ள மரத்திலிருந்து இறக்கிய பழம். இது சாமான்யமான பழங்களைப்போல் எளிதில் பக்குவமாய், உணவுக்கு போக்கியமாவதில்லை. இதின் விசேஷமென்னவென்றால் அதிக நாட் கழித்துக் கனிந்தபொழுது பழமெல்லாம் முழுக்கொட்டையாகவே இருக்கும். அக்காலத்தில் அதைப் பத்தடி ஆழம் பள்ளம் தோண்டிப் புதைத்துவிட்டால், பிறகு அதிலிருந்து உண்டாகும் விருக்ஷம் அநேக ஆயிரம் வருஷங்களுக்குப் பலனைக் கொடுக்கும். இவ்வளவு சிரேஷ்டமான பழத்தை, கண்டவர்கள் பேச்சைக்கேட்டு இகழாதீர்கள்,' என்றாள்."

மந்தன்: "அன்னையார் சொல் இவ்வாறு இருக்க, தந்தையினுடைய அபிப்பிராயம் வேறாக இருக்கின்றது. நான் அவரிடத்தில் இப்பழத்தின் காடின்னியத்தைப்பற்றிச் சொல்லுகையில், அவர் கோபங்கொண்டு, 'அடே, சிறுவர்களா, உங்களுக்கு நிஜமாகவே மாம்பழத்தைக் கொடுத்து விட்டேன் என்று எண்ணிவிட்டீர்களா? உங்களுக்குப் பழத்தைக் காப்பாற்றும் திறமையுண்டாவென அறியும் வண்ணம், மாமாம்பழமல்லவா கொடுத்தேன்! அதை நீங்கள் அழுத்தி, சேஷ்டைகள் செய்தீர்களேயாகில், அதிகக்கெடுதல்கள் நேரிடும். ஜாக்கிரதையாயிருங்கள். அது மாம் போன்றிருக்கின்றதென, வாயினாலாவது கையினாலாவது அதைத்தீண்டினால், வாயும் கையும் அறுந்துவிடும். அதில் கூர்மையான இரும்புத் தகடுகள் புதைக்கப்பட்டு, மேலே வர்ணம் பூசப்பட்டிருக்கின்றது. நீங்கள் இப்பொழுது வந்து சொன்ன மாதிரியிலிருந்தே, அதை சரியாய் வைத்துக் கொள்வீர்களென்று எனக்கு நம்பிக்கையில்லை. ஆனாலும் ஜாக்கிரதையாயிருங்கள்; இன்னும் கொஞ்சநாள் பார்க்கிறேன்,' என்றார்."

மகிழன்—"அண்ணா ஏகாந்தா, தந்தை சொல்லியது நிஜமல்லவென்றும், எங்களை பயப்படுத்துவதற்காகவே அவர் அப்படிச் சொன்னாரென்றும், அன்னை மந்தாகினி இரகசியமாகச் சொன்னாள். அதுதான் சரியென்று நினைக்கிறேன். தந்தையும் இவ்வளவு குரூரமாகச் செய்திருப்பாரென்று நம்பமுடியவில்லை."

ஏகாந்தன்—"தம்பியரே, நீங்கள் சொல்லிமுடித்த விஷயங்களைக் கேட்டவுடன், எனக்குத் தந்தையாரிடத்திலிருந்த கௌரவம் அதிகப்பட்டது. நான் அவரை எப்பொழுதும் உண்மையுரைப்போரென நம்பியிருந்தேன். ஆனால் அன்னை மந்தாகினி, இரக்க முடையவளாதலாலும், மேலும் நம்மிடத்தில் மிக்க அன்புள்ளவளாதலாலும், நமக்குப் பிதாவிடத்தில்தோஷபுத்தி வரலாகாதென்று எண்ணி, உள்ளபொருளை மறைத்துக் கூறுவது வழக்கம். அது இப்பொழுது நன்றாய் வெளியாகிவிட்டது. அன்னை மாம்பழம் கொடுக்கும் ப்ரஸ்தாபம் செய்தபோதே, அது நடவாத காரியமெனத் தீர்மானித்தேன். எங்கேயாவது தானாகவே தன் மக்களைப் பிரித்து, வேறு குடித்தனம் செய்யும்படிச் செய்து, அவர்களுக்குத் தனக்குள்ள பழங்களைப்

பிரித்துக் கொடுப்பதைப் பார்த்திருக்கிறீர்களா? இதை ஏன் கவனிக்கவில்லை? நான் தந்தைசொல்லே சரியென நம்புகிறேன். உங்களுக்கேன் இன்னும் மயக்கம்? அன்னை சொல்லியபடி எங்கேயாவது பழமெல்லாம் முழுக்கொட்டையாயிருப்பது கண்டதுண்டோ? உங்களுக்கு அன்னையிடத்திலுள்ள அன்பு மிகுதியானால், இவ்வாறு மயங்குகிறீர்கள். எனக்கு அன்னையிடத்தில் அன்பு குறையவில்லை யானாலும், இம்மாயைகளில் மயங்குவது என் மனமல்ல. நீங்கள் இதைக்கேட்டு கலங்குவது ஓர் ஆச்சரியமில்லை. மாயோனது அவ்தாரமாகிய ஸ்ரீராமனே காட்டில் பொன்மயமான மானைக்கண்டு, இளையவனால் 'அது மாரீசனுடைய மாயம், நிஜ மானல்ல', வென தடுக்கப்பட்டும், அதை மானென்றே தொடர்ந்து, பின்னர் துன்புற்றானெனின், சிறு குழந்தைகளாகிய நீங்கள் இம்மரமாம்பழத்தைக் கண்டு ஆவல்கொண்டது ஒரு புதுமையாகுமா? இம்மாயம் செய்த தாயும் வெறுக்கத்தக்கவளல்ல. அவளும் நம்மிடத்திலுள்ள அன்பின் மிகுதியால்தான் செய்தாள். இப்பொழுது தந்தையார் இதை வெளியிட்டாரென்று அவர்மேல் சலிக்கின்றது தகாது. அவர் கூறியதும் நமது நன்மைக்கே. நான் வெளிவந்ததினால் கஷ்டமடைகிறேனென்று நீங்கள் வருந்தவேண்டாம். இன்னமும் உங்களுக்குப் பழம் கிடைக்குமென்ற எண்ணமிருந்தால், பிரயத்தனம் செய்து, தாய்தந்தையர் சொல்வதை வணக்கமாய்க்கேட்டுக்கொண்டு பிழையுங்கள். உங்களை அவ்வழியினின்றும் மாற்றவேண்டுமென்ற எண்ணம் எனக்குக் கிடையாது. எப்படியாவது நீங்கள் பலனடைந்தால் சரி,'' யென்ற சொல்லிவிட்டு வெளியே சென்றான். மந்தனும் மகிழனும் தலைகுனிந்து வெளியே சென்றார்கள். நானும் என் நோக்கத்திற்கேற்பட்ட இடைஞ்சலை எண்ணி வருந்தி, வெளியே வந்து விட்டேன். ''ராமசந்திரர்.''

ஊக்கத்தின் பெருமை

[புதிய ஏற்பாட்டாசமம், ஒரு நூதன மொழிபெயர்ப்பு. — A New Tamil Version of the New Testament.

அஸோஸியேஷன் பிரஸ், (Y. M. C. A.) 5, ரஸ்ஸெல் தெரு, கல்கத்தா. 1922. (பேபர் பைண்ட்) ரூபாய் 2-4. (க்ளாத் பைண்ட்) ரூபாய் 2-12

இப்புத்தகம் அஸோஸியேஷன் பிரஸ், மதராஸ் பிராஞ்ச், Y. M. C. A., எஸ்ப்ளனேட், மதராஸ், என்ற விலாசத்திற்கும் எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

இப்படியும், நமது தேசத்திற்காகவும், நமது சாஸ்திரங்களுக்காகவும் நாம் எப்பொழுதுதாவது உழைப்போமா? இப்புத்தகத்தைப் பார்த்ததும் இவ்வெண்ணமே நம்மை வருத்துகின்றது. என்ன ஊக்கம்! முப்பது வருஷகாலமாய் ஒரே லக்ஷியத்துடன் இடைவிடாமல் உழைப்பவர்களை நாம் எவ்வாறு கொண்டாடவேண்டும்! ஜீஸஸ் க்ரைஸ்ட் சரித்திரம் இதில் வெகு அழகாய் வர்ணிக்கப்பட்டுள்ளது. அவதார புருஷர்களுள் ஒருவரான அவரது வாக்கையும், மேன்மையையும் இதின் மூலமாய் தமிழர்களெல்லோரும் படித்தறிவதற்கு இப்போது சமயம் வாய்த்திருக்கின்றது. 'உபநிஷத்'களுக்கு சமானமாகவே இப்புஸ்தகத்தையும் நாம் கௌரவத்தோடு பாராட்டுவது யுக்தமல்லவா? இதைத் தமிழர்கள் படிப்பதும் இன்றியமையாததென எண்ணுகிறோம்.

க்ரைஸ்ட் பிரபுவினுடைய ஆணைகளுக்கிணங்கவே, தமது மனோவிகாரத்தை ஜயித்து, மகாத்மா காந்தியைப் போன்றவர்கள் இவ்வளவு உயர்த்தியாக வளர்ந்திருக்கிறார்களேயாகில், நாமும் அவருடைய சரித்திரத்தை மிகுந்த சிரத்தையோடு மனனம் செய்வதில் ஒரு பிசகுமில்லை. மதமென்ற ஓர் வித்தியாசத்திற்காகவே, பரம வேதாந்திகளான நாம் எதையும் இகழமாட்டோம்.

இப்புஸ்தகம் மிகச்சிறப்பாய் அச்சிடப்பட்டிருக்கின்றது. இதில், மூலத்தினுடைய கருத்தையும் இந்நூலாசிரியர் ஒப்பற்ற சாதுரியத்துடன், மிகவும் நேர்த்தியான நடையில் அமைத்திருக்கிறார். க்ரைஸ்ட் மன்னன், மலையின் மீதேறி, ஜனங்களுக்குபதேசித்த வார்த்தைகளைக் கேட்டு பிரமிக்காதவர்கள் யார்? அதிலுள்ள ஆக்கிரகம் அனைத்தும் தமிழில் தெளிவாய் உரைக்கப்பட்டுள்ளது. 8வது பக்கத்தில், 5ம் பாகத்தை ஆராய்ந்து பார்ப்பவர்களுக்கு இவ்வுண்மை எளிதில் விளங்கும். 'தன்னியர்கள்' என்ற பதம் மிக்கப் பொருத்தமுள்ளதாக இருக்கின்றது. இன்னும் இதைப்போலொத்த உதாரணங்களை நாம் எடுத்து விவரிப்போமாயின், இங்கு அவை பெருகுமென பயந்து இத்துடன் விட்டுவிட்டோம்.

இந்நூலாசிரியருக்கும், மேலும் இப்புஸ்தகத்தை வெளியிட்டவர்களுக்கும் வந்தனமளிக்கின்றோம். ஸ்கூல்களிலும், காலேஜ்களிலும், மற்றும் படிப்பவர்களிருக்கும் எல்லா இடங்களிலும் இது இருக்கவேண்டும்.

அவர்களும் நல்லவர்களே

இந்தியா சம்பந்தமாய் Mr. லாயிட் ஜார்ஜ் காமன்ஸ் ஸபையில் பேசியதைக் கண்டிப்பதற்காக, சென்னையில் ஓர் மீடிங் நடைபெற்றது. அதில் ஸ்ரீமான் T. V. சேஷகிரிஅய்யர் அக்கிராசனாதிபதியாய் வந்திருந்தார். பிரிடிஷ் பிரதம மந்திரியின் உபன்னியாசத்தைப்பற்றி இந்தியர்களுக்கிருக்கும் அதிருப்தியைக்காட்ட எண்ணியே பலர் வந்திருந்தனர். ஆகிலும் பெரும்பான்மையோர், Mr. லாயிட் ஜார்ஜ் தனதெண்ணத்தைக் காலத்தில் அவ்வாறு வெளியிட்டதற்காக இந்தியர்களெல்லோரும் களிப்படையவேண்டுமென்றும், மேலும் 1919ம் வருஷத்திய இந்தியா சீர்திருத்த சட்டம் ஓர் பெரும் மாயையென்பதை அவருடைய பிரசங்கம் நன்றாய்க் காண்பித்து விட்டதென்றும் இந்தியர்களது அபிப்பிராயத்தைப் ''ப்ரெஸிடெண்ட்'' அவர்கள் வெளியிடவேண்டுமென்றே வற்புறுத்தினார்கள். இவ்வாறு சொன்னவர்கள் மகாத்மா காந்தி பக்கத்தாரென்பது தானாகவே விளங்கும். அன்றைய தினம் அவர்கள் நடந்து கொண்ட விதத்தைப்பற்றிப் பலர் பலவாறு பேசியிருப்பதால், இவ்விஷயத்தில் அக்கிராசனாதிபதியாய் வீற்றிருந்த ஸ்ரீமான். T. V. சேஷகிரி அய்யரவர்கள் எழுதியிருப்பதை நாமிங்கே மறுபடியும் எடுத்தெழுதுகின்றோம்.

''சபையோர்கள் நடந்த மாதிரியில் கொஞ்சமேனும் ஒழுங்கீனமில்லை. மெம்பர்கள் பெரும்பாலும் நம்முடைய தீர்மானத்திற்கு விரோதமாகவே இருந்தபடியால், அவர்கள் அவ்வாறு நடந்ததில் ஒரு பிசகுமில்லை. தவிர, அன்றையதினம் ஒரு குழப்பமும் இல்லாமல், சபையிலிருந்தவர்கள் மிகவும் அடக்கத்தோடு நடந்துகொண்டார்கள். அம்மாதிரியே இந்தியா முழுவதும் மீடிங்களில் எல்லாம் ஜனங்கள் ஒழுக்கத்துடன் நடப்பார்களேயா

கில், சென்னைவாசிகள் அன்று நடந்த விதத்திலிருந்து அவர்களும் ஓர் நல்ல விஷயத்தைக் கற்றுக் கொண்டுவிட்டதாயிருக்கும். அன்றையதினம் கூட்டத்தில் விபரீதங்கள் பல நிச்சயமாய் சம்பவிக்குமென்றே என்னை எச்சரித்தார்களாயினும், முற்றும் அபிப்பிராய பேதத்திற்காக என்னிடம் மரியாதைக் குறைவோடு நடக்கமாட்டார்களென நினைத்தேன். * * * * *
கடைசியில் நான் எண்ணியபடியே எல்லாம் முடிந்தது."

மகாத்மா காந்தி கக்ஷியார் மிகவும் துஷ்டர்களென்றே எங்கும் தள்ளப்பட்டுவரும் காலத்தில், அவர்களும் நியாயத்திற்குட்பட்டவர்களென்று ஸ்ரீமான் சேஷகிரி அய்யர் கூறியிருக்கிறார். அவருடைய மதிப்பையும் அவர்கள் என்றைக்கும் பொய்யாக்கமாட்டார்கள்.

உபவாசம்

நாம் செய்து வருங்காரியங்களெல்லாம் மனதைப் பொருத்திருக்கின்றன. நாம் அடையும் பலனும் நம்முடைய மனப்பான்மையைச் சார்ந்திருக்கின்றது. உபவாஸபலனும் அப்படியே. பட்டனி கிடப்பதால் புண்ணியமுண்டு. ஆயினும் அப் புண்ணியம் நமது மனோவிகாரத்தால் பாபமாகவும் முடிந்துவிடும். அதற்காகவே பெரியோர் ஸங்கல்பமென்று ஒன்றை விதித்திருக்கிறார்கள். ஸங்கல்பத்தால்தான் மனதும் ஓர் நிலையில் நிற்கக்கூடும். பெரிய விஷயங்களுக்காக பட்டினி கிடப்பதென்பது நமது இருஷிகள் கண்டு பிடித்திருக்கும் சூக்ஷமமாகும். அதனால் மனதும் சுத்தமாவதுடன், நாம் நிரம்பவும் திடத்தையும் தீர்மானத்தையும் அடைகின்றோம்.

உபவாஸமிருப்பதால் சரீரத்திற்கே மிகுந்த நன்மையுமுண்டு. பிணிகள் பல நீங்கும். வைத்திய சாஸ்திரத்தில் இதை ஒத்துக்கொள்வார்கள். மேல் நாட்டு வைத்தியர்களும் இவ்விஷயத்தை அங்கீகரித்து, இப்பொழுது ஜலரோகத்திற்காக உபவாஸமே உயர்ந்த சிகிச்சை எனவும் கொண்டாடுகின்றனர். பட்டினி கிடப்பதால் மனிதன் மடிப்பதின்றி, மீளவும் தனது யௌவனத்தை அவன் பெறுவதாகவே நினைக்கின்றார்கள்.

சுமார் பத்து வருஷங்களுக்கு முன், பட்டினி தான் மருந்தென்றால், வைத்தியர்களும் அதை நம்பாமல் இகழ்ந்து வந்தது வழக்கமாயிற்று. ஆயின் இக்காலத்தில் வைத்தியர்களெல்லோரும் அதைத்தாங்கியே பேசுகிறார்கள்.

"பட்டினி யெனில், நினைத்தபடி யெல்லாம் உபவாஸமிருப்பதில் பிரயோஜனமேயில்லை. ஒரு முறை, ஆறு நாள் சுத்த பட்டினியுடனும், வைத்தியசாலையில் ஒவ்வொருதினம் பன்னிரண்டு மணி நேரம், ஓயாமல், வைத்தியனாய், வேலைபார்த்திருக்கின்றேன். அப்பொழுது எனக்கிருந்த உத்சாகத்தையும், தெளிவையும், நான் என்றைக்கும் கண்டதில்லை. ஏழாவது நாள் காலையில், பாரணைக்காக நான், ஒரு பழத்தைக் கையில் எடுக்கும்போது, என்னுடைய நண்பர் ஒருவர் நடக்க முடியாமல் ஓடிந்து விழுந்துகொண்டு, எனது அறைக்குள் பிரவேசித்தார். என்ன ஆபத்தென்று விசாரிக்கையில்,—ஒன்றுமில்லை; ஏதோ ஒரு தவறுதலால், பணப்பையை ஊரில்வைத்துவிட்டு, ரயிலிலேறி வரும்பொழுது, வழியில் பதினான்கு மணிநேரம் அன்னாகாரமின்றி, அவருக்குக் கண் பஞ்சடைந்துவிட்டது! இக்கதையைச் சொல்லிமுடிக்குமுன் அவர் மூர்ச்சையடைந்தார். அவரை நான் வாரியெடுத்து உபசாரம் செய்தேன். 144 மணிநேரம் நான் ஒரு ஸங்கல்பத்துடன் உபவாஸம் இருந்தேன்; அவரோ 14 மணி நேரம் வழியில் கொஞ்சமேனும் ஆகாரமில்லாமல், கண்கள் குழிந்து, தவித்துவிட்டார். அவருக்கும் எனக்கும் அதுதான் வித்தியாசம். ஆகவே பட்டினிகிடப்பதும் மன நிலையைப் பொருத்ததாயிருக்கின்றது."

இவ்வாறு ஒரு மேல் நாட்டு வைத்தியர் கூறுகின்றார். பட்டினியே பரம ஒளஷதமாய் உதவுகின்றது. இதனால் கணக்கற்ற நன்மைகளுண்டு. மருந்துகளைப்போல, இதுவும் பலஹீனத்தை உண்டாக்குவதில்லை.

உபவாசமிருப்பதால் நமது சரீரம் பரிசுத்தமாவதுடன், வலுவையும் அடைகின்றது. பட்டினி கிடப்பதற்கும் விதிகள் இருக்கின்றன. அவைகளை வெகு ஜாக்கிரதையோடு அறிந்துகொள்ளவும் வேண்டும். அதில் நம்பிக்கையற்றவர்கள் பட்டினியாயிருப்பதால் பிரயோஜனம் சிறிதுமில்லை. பட்டினி கிடக்கும்போது, உறவினர் அடையும் பயத்தாலும் நாம் கலங்கக்கூடாது. அக்காலத்தில் (உபவாஸகாலத்தில்) ஜலத்தை ஏராளமாகப் பருகவேண்டும். பாரணை செய்யும் பொழுதும் மிக்க கவனத்துடனிருப்பது முக்கியம். உபவாஸத்தை முடித்தபின், எந்த ஆகாரம் மிகவும் யுக்த மென்பதை வைத்தியர்களைக் கேட்பதவசியமானது. ஏனெனில் உபவாஸ பலன் பாரணைபண்ணும்விதத்தைப் பொருத்ததாயும் காணப்படுகின்றது.

புயற் காற்று.

இளமைப் பருவத்தில் காதலர்களுக்கு உரியவை யென்று கவிகள் கல்பிக்கும் சௌகரியங்கள் ஒன்றுமே கல்கத்தாவில் கிடையாது. பூத்துச் சொரியும் அசோகம் வகுளம் முதலிய விருக்ஷங்கள் அடங்கிய தோப்புகளோ, மாதவி முதலிய கொடி படர்ந்த பந்தர்களோ, இனித்துப்பாடி மனதைக் கவர்ந்து உற்சாகப்படுத்தும் குயிலினங்களோ ஒன்றுமே இல்லாமல் பொட்டலாய் அழகிழந்து விளங்கும் நவீன நகரத்தினின்றுங்கூட மன்மதன் மனம் சோர்ந்து பின் வாங்குவதில்லை. எல்லா அசௌகரியங்களையும் காதலர்களுக்கு இனிய சௌகரியங்களாய் மாற்றும் அபார சக்தி அவனிடம் உண்டல்லவா? நகரத்து ஜன நெருக்கத்திலே வண்டிகள் குறுக்கும் நெடுக்குமாய் ஓடிக்கொண்டிருப்பினும் சிவப்புத் தொப்பி தரித்து காவலிருக்கும் போலீஸாரின் கண்ணில் படாமல் வில்லும் கையுமாய் சஞ்சரிக்கும் காமதேவனின் செயல்களை முற்றும் உணர வல்லவர் யார்?

"காலுதோலோ"வில் வாடகைக் கென்று கட்டப்பட்ட வீடுகளில் சக்கிலியன் கடை எதிர்ப்புறமும் மளிகைக் கடையொன்று அயல்ப்புறமுமாய் இருந்தபோதிலும், அங்கு இராமேசனும் ஹேமநளினியும் பாராட்டிய காதல் இரமணீயமான உத்யானங்களில் அவர்கள் இருப்பின் எவ்விதம் வளருமோ அவ்விதமே தட்டுத் தடையின்றி பெருகிற்று.

'டீ'க் கறையேறிய துணியால் மூடப்பட்ட அந்த பாபுவின் சொத்தை மேஜைதான் அவர்கள் பழகுமிடம்; என்றாலும் தாமரை பூத்த தடாகங்களில்லையே என்று இராமேசனுக்குத் தோன்றி அவன் வருத்த மடையவில்லை. ஹேமநளினி பிரியத்துடன் வளர்த்துவந்த பூனைக்குட்டி

யை கழுத்தில் தட்டிக்கொடுத்து இராமேசன் பாராட்டியதுபோல அவ்வளவு ஊக்கத்துடன் கதைகளில் சொல்லப்பட்ட காதலர் கூட தன் ஆசைநாயகியின் மான்குட்டியோடு கொஞ்சி இருக்கமாட்டார். அந்தப் பூனை தன் கழுத்தை வளைத்துக்கொண்டு முதுகுப் புறத்தை நக்கிக் கொடுத்துக்கொள்ளும்போது இராமேசனுக்கு அந்த பூனையைப்போல் அழகிய ஜந்துவே கிடையாது என்று தோன்றும்.

பரீக்ஷை மேலேயே கண்ணாயிருந்த காலத்தில் ஹேமநளினி தையல்வேலையை சற்று கவனியாதிருந்து விட்டதால் இப்போது கொஞ்சநாள் தன் சிநேகிதியிடம் தையல் வேலை கற்றுக் கொள்ளவேண்டியிருந்தது. இராமேசனோ, தையல் வேலை பயனற்ற வீண்வேலை, புத்தியுள்ளவர் கவனம் செலுத்தத் தக்கதல்ல என்ற எண்ணங்கொண்டவன். தானும் ஹேமநளினியும் காவியப்படிப்பிலே மனம் செலுத்தி ஒத்திருக்கலாமே; அதைவிட்டு, தையல் வேலை என்றால், தான் பின் வாங்கவேண்டி வருகிறதே என்ற வருத்தம் இராமேசனுக்கு. "உனக்கென்ன இப்போது இந்த தையல்வேலையில் இவ்வளவு உத்சாகம் வந்து விட்டது" என்பான் முகத்தை கோணிக்கொண்டு. "வேறு வேலையில்லாதவர்களுக்கு அல்லவோ இது சரியான வேலை," என்பான். அதற்குப் பதில் அளியாமல் புன்சிரிப்புடன் ஊசியிலே நூலைக்கோற்க ஆரம்பிப்பாள் ஹேமநளினி.

ஒரு நாள், இராமேசன் இப்படிப் பேசும் போது அக்ஷயன், "இராமேச பாபுவுக்கு உலகில் பயன்படக்கூடிய காரியம் ஒன்றுமே பிடிக்காது. ஐயரவர்கள் பெரிய தத்துவ சாஸ்திரியாய் கவிசிரேஷ்டராய் இருக்கலாம். ஆனால் இப்படி எல்லாவற்றைப் பற்றியும் இழிவாய் பேசுவது ஆகாது," என்று பொடிவைத்துப் பேசவே, இராமேசன் உடனே வாக்கு வாதத்திற்கு கக்சை கட்ட ஆரம்பித்தான்.

அதற்குள் ஹேமநளினி "என்ன, இராமேச பாபு, எதற்கும் பதில் சொல்லித்தான் ஆகவேண்டுமோ? வீண் பேச்சுக்கு ஒரு முடிவு கிடையாதா என்ன," என்று அவனை அடக்கி விட்டு, தன் மடியிலிருந்த பட்டுத்துணியில் சித்திரம் புனைவதிலேயே கண்ணாயிருப்பவள் போல் தலை குனிந்து ஊசியை ஓட்ட ஆரம்பித்தாள்.

ஒருநாட் காலையில் இராமேசன் தன்னுடைய படிப்பறை புகுந்ததும் அங்கே அவன் மேஜையின் மீது பூக்கள் போட்டு தைத்திருந்த பட்டுத்துணியில் "பையிண்ட்" செய்யப்பட்ட புஸ்தகமொன்று இருந்தது. அதில் ஒரு மூலையில் இராமேசனின் பேரின் முதலெழுத்தான 'R' என்ற அக்ஷரமும் மற்றொரு மூலையில் தங்கநிற நூலில் தைக்கப்பட்ட தாமரை மலர் (ஹேமநளினம்) ஒன்றும் காணப்பட்டது. அந்த புஸ்தகம் யார் அனுப்பியது, அனுப்பியவர் மனதின் உட்கருத்து யாது என்ற சந்தேகம் உண்டோ இராமேசனுக்கு; அவன் இருதயம் ஆசைமிகுதியால் படபடத்தது. ஊசிவேலையை அவன் இகழ்ந்து வந்ததெல்லாம்போய் இப்பொழுது ஒரு நொடியில் அவன் மனம் முற்றும் மாறியது. இப்பொழுது யார் வரினும் எதிர்த்து ஊசிவேலையின் பெருமையைப் புகழ்ந்து பேசி நிலை நாட்டத் தயாராக இருந்தான். அவன் அந்த புஸ்தகத்தைத் தன் மார்புடன் அணைத்து நின்றபோது அக்ஷயனிடங்கூட தான் ஊசிவேலையை இகழ்ந்து பேசியது முற்றும் தவறு என்று ஒப்புக் கொள்வான் அல்லவா?

பிறகு அந்த புஸ்தகத்தைப் பிரித்துப் பார்த்துவிட்டு பின் வருமாறு ஒரு காகிதம் எழுதினான்.

"நான் மட்டும் ஒரு கவியாயிருந்தால் என் பாடல்களின் பிரதி ஒன்றை உனக்கு அனுப்பியிருப்பேன்; வேறு நான் பதிலாக அனுப்பக்கூடியது ஒன்றுமில்லை. என்னால் ஒன்றும் கொடுக்க முடியவில்லை என்றாலும் ஏற்றுக்கொள்ளும் கௌரவத்தை வகிக்கும் சக்தி என்னிடம் ஏராளமாக இருக்கின்றது. நான் எதிர் பாராதிருந்த இதை நான் எவ்விதம் ஏற்றுக்கொண்டேன் என்பதை நானும் எல்லாம் அறியவல்ல ஈசனுமே அறிவோம். உன்னுடைய நன்கொடையோ கண்டு கையாளத் தக்கதாக விருக்கின்றது. என்னுடைய நன்றியறிவோ உருவம்கொண்டு வெளிப்படாதது. அது இருப்பதற்கு என் வாய் மொழி தவிர வேறு ருசு இல்லை." சதா உன் கொடையால் கடன் பட்டிருக்கும், இராமேசன்.

கிரமமாய் ஹேமநளினிக்கு இந்தக்காகிதம் கிடைத்தபோதிலும் இராமேசனும் அவளும் இதைப்பற்றிப் பேசவில்லை.

மழைக்காலம் சமீபித்தது. மழையின் முக்கிய நன்மைகளெல்லாம் நாட்டுப்புறத்திற்குத்தான். பட்டணவாசிகளுக்கு மழை முற்றிலும் நன்மைகளையே விளைவிப்பதில்லை; நனையாதிருப்பதற்காக பல முயற்சிகளிலே மனம் வைத்து வீட்டிலே ஜன்னல்களை மூடியும் கூரையை புதிதாய் மேய்ந்தும் மாடியில் ஒழுகுமிடங்களை அடைத்தும், வெளியில் கிளம்பும்போது குடைகளைப் பிடித்துச் சென்றும் "டிராம்" வண்டிகளின் மறைப்புகளை தாழ்த்தி விட்டும் இப்படியெல்லாம் பலவாறு முயன்றும் எங்கும் ஈரமாய் ஒரே சகதியாய் விடுகிறது.

நாட்டுப்புறத்தில், ஆறு, மலை காடு கழனி எல்லாம் மழையின் வரவை நண்பனின் வரவைப் போல் எதிர்பார்த்துக் களிக்கின்றன. இயற்கை யழகு பொருந்திய இவ்விடங்களிலேதான் மழையின் சுபாவமும் பெருமையும் கௌரவமும் நன்கு விளங்குகின்றது. ஆகாயமும் பூமியும் கார்க்காலத்து மேகங்களின் வரவை எதிர் கொண்டு அழைக்கும் கொண்டாட்டத்தில் ஏதாவது விசனத்திற்கு இடமுண்டோ?

மலைகள் போன்றவர் இளங்காதலர்கள். ஓயாது பெய்யும் மழை அந்த பாபுவின் வயிற்று நோயை அதிகப் படுத்தியதே யொழிய இராமேசன் ஹேமநளினி இவர்களுடைய உத்சாகத்தை மட்டுப்படுத்தவில்லை. அநேக நாள், மழையினால் இராமேசன் கோர்ட்டுக்குப் போக முடியாமலிருந்தது. நாளுக்கு நாள் மழை பலப் படவே ஹேமநளினி விசாரத்துடன்,

"இராமேச பாபு, இந்த மழையில் எப்படி வீட்டிற்குப்போவது" என்பாள். இராமேசன், "அதற்கென்ன, பாதகமில்லை; நான் எப்படியாவது சம்மாளித்துக் கொள்ளுகிறேன்."

"வீட்டுக்கு நனைந்துபோய் ஜலதோஷம் பெறுவதில் என்ன பிரயோசனம்? இங்கேயே இருந்து எங்களுடன் சாப்பிடக்கூடாதா?" யென்பாள் ஹேமநளினி.

இராமேசன் தேக சௌக்கியத்தைப் பற்றி அவ்வளவு கவலைப்படுபவன் அல்ல; அப்படி கவலைப்படவேண்டிய அவசியமும் இல்லை. அவனை அறிந்த எந்த நண்பனும் உறவினனும் அவனுக்கு அவ்வளவு இலகுவாய் ஜலதோஷம் பிடிக்கும் என்று பயப்படமாட்டான். இருந்தாலும் மழை

நாட்களில் அவன் ஹேமநளினியின் உத்தரவை மேற்கொண்டவனாய் தன் வீட்டிற்கு பத்தடி நடந்துபோவதுகூட தன் உடம்பைக் கெடுத்துவிடு மென்று நினைக்க ஆரம்பித்தான். வானம் இருண்டு மழை சூழ்ந்து வந்தால் இராமேசனை தன் அறைக்கு அழைத்துச்சென்று ஹேமநளினி அவனுக்கு வருவல்கள் முதலிய பக்ஷியங்கள் தயார் செய்து கொடுப்பாள். ஜலதோஷம் பிடிக்கும் என்ற பயமேயொழிய இராமேசனுடைய ஜீரண சக்தியைப் பற்றி கவலைப்பட வேண்டியதில்லை போலும்.

இப்படியாக இளைஞர்இருவரும் ஒருவருக்கொருவர் அன்பு பூண்டு பழகுவதில் நாட்களைக் கழித்தனர். இதன் முடிவு என்னவாகும் என்று இராமேசன் எண்ணவேயில்லை. ஆனால் அந்த பாபுவோ அதே எண்ணமாயிருந்தார். அவருடைய நண்பர்களும் உறவினரும் அதைப் பற்றியே பேசிக்கொண்டு இருந்தார்கள். இராமேசனுக்கு தன் படிப்பிற்கேற்ற லோகாநுபவம் கிடையாது. இப்படி அவன் காமங்கொண்டது தன் உலக வியவகாரங்களைக் கலக்குமே என்ற எண்ணம் உண்டாகவில்லை; அந்த பாபு அவனுடைய முகத்தையே உற்று நோக்கிக் கொண்டிருந்தபோதிலும் அதினின்று அவருக்கு ஒன்றுமே விளங்கவில்லை.

புத்தகங்கள்.

1. இந்து தேசாபிமானிகள் சரித்திரம். முதற் பாகம். மூன்றாம் பதிப்பு. கணேஷ் அண்டு கம்பெனி, சென்னை. விலை அணா 12.

இந்திய தேசாபிமானிகளைப் பற்றிய இப்புத்தகத்தை கணேஷ் அண்ட் கம்பெனியார் வெளியிட்டதற்காக மிகவும் சந்தோஷமடைகின்றோம். ஸ்வராஜ்ய ஸ்வதந்திரத்தை நாம் அபேக்ஷித்து நிற்கையில், நமது தேசத்தின் நிமித்தம் ஒப்புயர்வற்ற ஆக்கிரகத்தோடு பாடுபட்டுழைத்திருக்கும் தேசபக்தர்களுடைய சரித்திரத்தை நாம் நன்றாயறிந்து கொள்வதும் முக்கியமல்லவா? தமிழிலும், ஸர். P. M. மேடா, கோபாலகிருஷ்ண கோகலே முதலியவர்கள் செய்திருக்கும் காரியங்களெல்லாம் இப்புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கின்றன. தமிழ்நாட்டில் ஒவ்வொருவரும் இதைப் படிக்கவேண்டும்.

2. அநுமான் ஸிங் சரித்திரம்.

ஸ்ரீமான் பிரணதார்த்திஹரசிவா இயற்றியது. நன்காம் பதிப்பு. கணேஷ் அண்ட் கம்பெனி, சென்னை. விலை அணா 12.

இக்கதை நிரம்பவும் ரஸமுள்ளதாயிருக்கின்றது. ஹைஸ்கூல்களிலும் இண்டர்மீடியட் வகுப்புகளிலும் படிப்பவர்களுக்குத் தமிழில் நல்ல அறிவை இது புகட்டக் கூடும்.

3 & 4. இந்திய சுயராஜ்யம்.

ஒத்துழையாமை ஏன்?

கணேஷ் அண்ட் கம்பெனி, சென்னை.

ஒவ்வொன்றுக்கும் விலை அணா 8.

இந்திய சுயராஜ்யமென்னும் இப்புஸ்தகத்தில் மகாத்மா காந்தியின் நோக்கங்கள் பல அடங்கியிருக்கின்றன. தமிழர்களும் எளிதில் படித்தறிந்து கொள்வதற்காக இஃதெழுதப் பட்டிருக்கிறது. இதை வெகு ஜாக்கிரதையோடு நாமனைவரும் படித்து இதன் சாராம்சத்தை உட்கொள்ளுவதே, மகாத்மா காந்தியையும் நாம் ஒருவாறு தெரிந்து கொள்வதாகும்.

ஒத்துழையாமைக்காரர்களுள் இருபதினாயிரம் பெயர்கள் இத்தருணத்தில் ஜெயிலில் அடைபட்டிருக்கும்போது, எக்காரணத்திற்காக அவர்கள் இவ்வாறு மனம் துணிந்தார்களென்றால், இப்புஸ்தகத்தில் "ஒத்துழையாமை ஏன்," என்று தெளிவாய் விவரிக்கப்பட்டிருக்கின்றது. "புதிய சகாப்தம்," "சத்யாக்கிரகம்" "பஞ்சாப் படுகொலை," "நவசக்தி உதயம்," இவைகளையும், மகாத்மா காந்தியின் உபன்னியாசங்களையும் நாம் அறிந்து கொள்ளாவிட்டால், இந்தியர்களாய்ப் பிறந்த நமது ஜன்மமும் வீணே.

இவ்விரண்டு புஸ்தகங்களையும் கணேஷ் அண்ட் கம்பெனியார் வெளியிட்டிருப்பதே ஓர் சிறந்த கைங்கரியமாகும்.

5. "ஒப்புயர்வற்ற உலகசிரேஷ்டர்."—மகாத்மா காந்தி. வி. நாராயணன் கம்பெனி, மதராஸ். விலை அணா 5.

இது மிக்க சிரத்தையுடன் எழுதப்பட்டது. ரெவரெண்ட் ஹோம்ஸ் என்பவர் மகாத்மா காந்தியையே அபாரமாகக் கொண்டாடி வருவதற்குக் காரணங்கள் இதில் நன்றாய்ப் புலப்படும். தமிழ்நாட்டில் இப்புஸ்தகம் லக்ஷக்கணக்காகப் பரவச் செய்வதும் நமது கடமையேயாகும்.

6. சிறு கதைகள். ஸ்ரீமான் M. S. கிருஷ்ணஸ்வாமி அய்யரால் இயற்றப்பட்டது. வி. நாராயணன் அண்ட் கம்பெனி, மதராஸ். விலை அணா 8.

7. ஸ்வப்னபல அகராதி, ஸ்ரீமான் M. S. கிருஷ்ணஸ்வாமி அய்யரால் தொகுக்கப்பட்டது. விலை அணா 8.

இவ்விரண்டு புஸ்தகங்களும் படிப்பதற்குக் குதூகலத்தை உண்டாக்குகின்றன.

"தமிழ் உலகு"

சென்னை மைலாப்பூரிலிருந்து ஸ்ரீமான் S. பட்டாபிராமன், எம். ஏ. ஆல் வெளியிடப் பட்டுவரும் இவ்வாராந்தத் தமிழ்ப் பத்திரிகையைப்பற்றி நமது அபிப்பிராயத்தை ஏற்கனவே வெளியிட்டிருக்கிறோம். மகாகவி ரவீந்திரநாத் டாகூர் தமது நூல்களைத் தமிழில் இப்பத்திரிகையில் வெளியிட அனுமதி கொடுத்திருக்கிறார். அவருடைய புத்தகங்களின் உரிமையை வகித்து வரும் மாக்மிலன் கம்பெனியாரும் இதற்கிணங்கி இருக்கின்றனர். சித்திராவென்னும் அவருடைய நூலானது ஏற்கனவே இப்பத்திரிகை வாயிலாக வெளிவந்திருக்கிறது. மொழி பெயர்ப்பில் மகாகவியின் ஆழ்ந்த கருத்து பின்னப்படாமலிருக்கிறது. அவருடைய மற்றொரு நூல் இப்பொழுது தொடர்ச்சியாக இப்பத்திரிகையில் மொழி பெயர்க்கப்பட்டு வருகிறது. பக்கங்களும் அதிகப்படுத்தப்பட்டிருக்கின்றன. பல விஷயங்களைப்பற்றிய வியாசங்கள் வெளியாகின்றன. தாய்பாஷையை அபிவிருத்திசெய்வதையே முக்கிய நோக்கமாகக்கொண்டு இப்பத்திரிகையை அன்னார் நடத்திவருவதால் தமிழ்நாட்டினர் இதனை ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்களென்பதை நாம் கூறத்தேவையில்லை.

சுதேசமித்திரன், 16—8—1922.

சிறு கதைகள்.

தென்னிந்தியா சமூக வாழ்க்கையை அனுசரித்து எழுதப்பட்டுள்ள ஆறு நாவல்கள் கொண்டது. தற்காலம் நவீன நாகரீகத்தால் சமூக வாழ்க்கை எவ்விதம் மாறுபாடு அடைந்துவருகிற தென்பதும், வாழ்க்கை லக்ஷியங்களின் முரண்பாடுகளும் அவைகள் எவ்விதம் தீருகின்றன வென்பதும் நன்கு தெரியவரும். விலை அணா 8

ஸ்வப்ன பல அகராதி.

1000ஸ்வப்னங்களும் அவைகளின் பலன்களும். விலை அணா 8.

மகாத்மா காந்தி

ஹோம்ஸ் பாதிரியாரின் பிரசங்கங்கள் விலை அணா 5.

வி. நாராயணன் & கம்பெனி,
4. கொண்டி செட்டித் தெரு, மதராஸ்.

மஹாத்மா காந்தியின்
சிறைச்சாலை யனுபவங்கள்

தென்னாபிரிக்காவிலே நம்மவருக்காகப் போராடி சிறைச்சாலையை தேசாபிமானத் தவச்சாலையாகக் கொண்டு அருப்பாடுபட்டும் உள்ளஞ்சலியாது ஸாத்விக எதிர்ப்பையே சாதனமாகக் கொண்டு, தேசாபிமான தத்வங்களை மகாத்மா விளக்கிக் கூறியிருக்கும் அரிய நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு. எளிய இனிய நடையில், அவராலே கூறப்பட்டவாறு எழுதப் பெற்றது.

விலை ரூபா 0—8—0

மஹாத்மா காந்தியின் இந்திய சுயராஜ்யம்

ஸ்வராஜ்யம் என்பதை நன்கு விளக்கி அதில் மகாத்மா காந்தி எழுதிய நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு. நல்ல மரத்தில் புல்லுருவி பாய்ந்தது போல், நம் தேசத்தில் "நாகரிகம் நாகரிகம்" என்று தோன்றிப் பற்பலரையும் மயக்கி வருத்தும் சிலவிஷய விவரங்கள் நிர்மல சிந்தையுடன் விளக்கப்பட்டுள்ளன. படிப்போருக்கு மனமயக்கம் நீங்கித், தெளிவு உண்டாகி, தேசாபிமான உதயம் ஏற்படும்.

இதன் விலை 0—8—0

மஹாத்மா காந்தியின் சரித்திரம்

உலகிலே ஒப்புயர்வற்ற மகா புருஷ னெனவும், ஸ்ரீ பாரத பூஷண மெனவும் பெரியோர்களால் கொண்டாடப்படும் இப்பெருமானது சரித்திரத்தையும் அரும் பெருங் குணங்களையும் உயர்ந்த சீலத்தையும் ஒப்புயர்வற்ற தன்னலப் பரித்தியாகத்தையும் அறிய விரும்பும் தமிழ் மக்கள் அனைவருக்கும் இந்நூல் சிறந்த கருவியாகும். குழந்தைப் பருவ முதல் இன்றளவும் மகாத்மாவின் வாழ்வில் நேர்ந்துள்ள சம்பவங்கள் எல்லாம் அழகான தமிழ் நடையில் பாலரும் படித்தறியும் வண்ணம் விரிவாக எழுதப்பட்டுள்ளன. விலை அணா 0—8—0

கணேஷ் கம்பெனி,
39, தம்புசெட்டி தெரு, சென்னை.

"TAMIL WORLD"

WE have received from the Publisher, 16, Pasupati Agraharam, Mylapore, the first number of the "Tamil Ulagu" (Tamil World) a new Tamil weekly devoted to politics, literature and the arts. In politics it is an independent nationalist organ and gives its full support to the Bardoli programme. It is written in easy, elegant and popular Tamil and the first number contains very interesting articles on "The position of India in the last (Tamil) year". "The geological formation of the earth" and "The Empire of the mind" and a sympathetic review of the first two volumes of the late Mr. C. Subramanya Bharati's works which have just been published. The editorial "Ourselves" declares that the object of the promoters of the journal is to give adequate and permanent expression to the surging new life in the Tamil land. If further issues maintain the level of the first number, the journal deserves to succeed; and we wish it a prosperous career. The annual subscription is Rs. 5 and the half-yearly subscription Rs. 3.

'*The Daily Express*'

TAMIL WORLD

WE welcome with pleasure the first issue of the "Tamil World," a new Tamil weekly, published at Mylapore, which we gather, is the fruit of the conjoint labours of a group of brilliant young men with Mr. S. Pattabhiraman, M. A. as the Editor. The first issue is quite promising and the contents are varied and interesting. If the future numbers realise the promise of the first, with more of variety and less of scholarly length, the "Tamil World" would prove an asset.

'*The Swarajya*'

Press Opinions

THE TAMIL WORLD

WE commend to the reading public the "Tamil World," a new Tamil weekly published at Mylapore. The promise of the first and the second issues which we have received will gladden those interested in the new vernacular movement. Mr. Pattabhiraman, M. A., assisted by a number of talented and enthusiastic young men, will be the Editor. With Congress politics and wide sympathies with Science and Literature, we hope that the weekly will receive good support. The annual subscription of Rs. 5 is fair, as the get-up is quite attractive.

'The Hindu'

"தமிழ் உலகு."

"தமிழ் உலகு" என்று பெயர் வாய்ந்த வாரப் பத்திரிகை ஒன்று சென்னையில் ஆரம்பமாகியிருக்கிறதாகச் சின்னாள் முன் அறிவித்தோம். பிரதிவாரமும் வரும் அதைத் தொடர்ச்சியாகப்படித்துப் பார்த்ததில், தமிழ் மக்களுடைய அறிவைப்பல துறைகளிலும் வளர்க்க அது முயன்று வருகிறதென்பதில் சந்தேகமில்லை. அதன் ஆசிரியராகிய ஸ்ரீமான் எஸ். பட்டாபிராமன் ஆங்கிலம் கற்று எம். ஏ. பட்டம் பெற்றிருப்பதுடன், தமிழ் மொழியில் தேர்ச்சி பெற்றவர்; உலக வியவகாரங்களையும் நவீன சாஸ்திரங்களையும் பலவகைச் சரித்திரங்களையும் தமிழர் அறிந்து உயர்வு பெறவேண்டுமென்ற ஆர்வங்கொண்டவர். அவரை ஆசிரியராகக் கொண்ட "தமிழ் உலகு" தனது லட்சியங்கள் நிறைவேறத்தக்க வழியில் ஊழியம் செய்யுமென்பது நிச்சயம். இது வரையில் வெளி வந்துள்ள மூன்று வாரப் பத்திரிகைகளிலும் சில வியாசங்களைச் சிறப்பாகக் குறிப்பிடுவது தகும். பூமியின் பிறப்பு, நேஷன், மீரா பாய் சரித்திரம் ஆகியவைகளைப் பற்றிய வியாசங்கள் புது அறிவைத் தமிழருக்கு அவர்கள் அறியக் கூடிய நடையில் புகட்டுவனவாயிருக்கின்றன. இந்தப் பத்திரிகை தழைத்து தனது கருத்து நிறைவேறப் பெறுமாறு கடவுள் கருணை பொழிய வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

சுதேசமித்திரன்.

புத்தக விளம்பரங்கள்.

சுதேசமித்திரன் புத்தகசாலை.

உதயலன்.

என்கிற கொற்கைச் சிங்களவன்.

ஷேக்ஸ்பியர் மகாகவி ஆங்கிலபாஷையில் எழுதியுள்ள "ஒதெல்லோ என்கிற வெனிஸ் மோரியன்" என்னும் ஓர் அருமையானநாடகம். அ. மாதவையா அவர்கள் மொழி பெயர்த்தமைத்தது.

விலை அணா 12.

பத்மாவதி சரித்திரம்.

ஸ்ரீமான் அ. மாதவய்யா, பி.ஏ., எழுதிய அருமையான நாவல். புதிய பதிப்பு 10. படங்களுடன் கூடியது. இந்நூல் அலங்காரமாய் அநேக பழமொழிகளை அணிந்து சில மதுரமான கவிகளை உள்ளடக்கி, சிறுவர் சிறுமிகளும் எளிதிற் படித்தறியும்படியான தமிழ் நடையில் உள்ளது.

விலை ரு. 2.

வர்த்தகயுக்தி.

வியாபார சம்பந்தமான விஷயங்கள் கொண்டது. ஒவ்வொரு தொழிலாளியும் அவசியம் படிக்க வேண்டிய நூல். இதனை மெச்சிப் புகழாத பத்திரிகைகள் கிடையா. முதற் பதிப்பு விளம்பரமின்றி விற்பனை. இரண்டாம் பதிப்பு பத்திரிகையில் விளம்பரம் செய்த ஒரு வாரத்துக்குள் விற்பனை. இது நான்காம் பதிப்பு. விலை அணா 6.

சுதாமாலிகா.

இது ஒரு கதைக் களஞ்சியம்.

ஸி. சுப்பிரமணிய பாரதியார் எழுதிய விநோதக் கதைகளும், விசித்திரங்களும், பொதிந்து கிடக்கின்றன. கதா விநோதம், 33-விஷயங்கள் அடங்கியிருக்கின்றன, விலை ரூபா 1.

பாமாலை.

இராமலிங்க ஸ்வாமிகள், மாணிக்க வாசகர் முதலியோர் திருவாய்மலர்ந்த சில அற்புத பாடல்களை, ஒரு பெரியார் தொகுத்தபடி அச்சிடப்பட்டிருக்கிறது. கோயம்பத்தூர், திருநெல்வேலி ஜில்லாக்களில் பிரதிவாரந்தோறும் படிக்கும் பக்தசிரோன்மணிகளுக்கு இந்நூல் மிகவும் உபயோகமானது. விலை அணா 4.

சிறைவாசஞ் செய்யும்.

கிருஷ்ணஸ்வாமி சர்மா

அவர்களால் எழுதப்பட்டது.

	ரூ.	அ.
மகாத்மாகாந்தியின் குரு, டால்ஸ்டாய்	0	4
பண்டித மோதிலால் நேரு	0	2
மகாத்மா காந்தி	1	8
சித்தரஞ்சன தாஸ்	0	12
முஹம்மத் அலி, ஷவுகத் அலி	1	0
ஸ்வராஜ்யம்	0	8
லாலாலஜபதிராய்	0	8
சிவாஜி	1	0

திக்கற்ற இருகுழந்தைகள்.

இந்த நாவல் பெரியதாயும் வாசிக்கும் போது மகிழ்ச்சியுண்டாக்ககூடியதாயுமுள்ளது. பக்கச்சுவை மிகுந்து மகளிர் வாழ்க்கையிற் படிப்போர் யாவருக்கும் அனுதாபமும் ஒற்றுமை யுணர்ச்சியும் விளையும்படி செய்கின்றது. இது யாவருக்கும் விளங்கும் எளிய நடையை உடையது. படிக்கப் படிக்க மேன்மேல் மனதைக் கவரும் இனிய கதைப்போக்கையும் நன்கறிந்து கொள்ளலாம். விலை ரூ. 1-8.

மானேஜர், சுதேசமித்திரன்,
சென்னை.

பட்டு பீதாம்பர கம்பெனி, காசி

தந்தி விலாசம்: "ஆதிமூர்த்தி" பனாரஸ்.

பரிசுத்தமான சுதேச பட்டினுல், சுதேச வெள்ளி, தங்க சரிகையால் நெய்யப்பட்ட சேலைகள், வேஷ்டிகள், துப்பட்டாக்கள் சகல தினுசுகளும் தயாராக இருக்கின்றன. அவைகளின் விபரகேடலாக்கு ஆர்டர் செய்தால் அனுப்புகிறோம். கேட்லாக் இனும்.

SILK PITAMBER Co.,
BENARES CITY.

Telegrams: "Adimoorthi" Benares.

சுதேசியமானது! உபயோகமுள்ளது!!

அமிர்தாஞ்சனம்

எல்லா நோய்களுக்கும் சித்தௌஷதம்

தலைநோய், முதுகுநோய், இடுப்புவலி, மார்ச்சளி, சைத்தியம், கீல்பிடிப்பு, இருமல், ஒத்தைத் தலைநோய், வீக்கம், சுளுக்கு முதலான நோய்களுக்கு திவ்யாமிருதம்.

டப்பி 1-க்கு 0—10—0. டஜன் 1-க்கு 6—0—0.

படைமருந்து	பற்பொடி	மோஹினி தைலம்
டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு
0—6—0	0—2—0	0—12—0

அமிர்தாஞ்சனம் டிபோ, மதராஸ், பொம்பாய்.

தமிழ் உலகு

ADVERTISEMENT RATES
(PER INSERTION)

Per 1	Page	Rs. 12
Per ½	Page	Rs. 7
Per ¼	Page	Rs. 4

Apply to

The Manager,
'THE TAMIL WORLD'
MYLAPORE.

தமிழ் உலகு

சந்தா விகிதங்கள்

(தபால் கூலி உள்பட)

வருஷம் 1-க்கு ரூபா 5.
வருஷம் ½-க்கு ரூபா 3.

மானேஜர்,
'தமிழ் உலகு'
மைலாப்பூர்.

தமிழர் நேசன்.

சாஸ்திர அறிவைப் பரவச் செய்யும் மாதாந்தப் பத்திரிகை.

இது தமிழர் கல்விச் சங்கத்தால் வெளியிடப்படுவது

பட்டமும் பரிசும் பெற்ற பல மேதாவிகளால் எழுதப்பட்டது. பெண்டிரும் சிறுவர் சிறுமிகளும் படித்தறிதற் பொருட்டு மிகவும் எளிய நடையில் உள்ளது. சாஸ்திர விஷயங்களைத்தவிரப் பல கதைகளையும் குறிப்புகளையும் உடையது.

அநேகச் சித்திரப்படங்களோடு கூடியது.

கல்வி இலாகா டைரெக்டராலும், ஜில்லாபோர்டு தாலூகாபோர்டு தலைவர்களாலும், பள்ளிப் போதகர்கள் பலராலும் ஆதரிக்கப்பட்டது. உள் நாட்டு, வெளி நாட்டுப் பத்திரிகைகளால் புகழப்பட்டது.

வருஷச் சந்தா மூன்று ரூபாய்.

கௌரவக் காரியதரிசி,
தமிழர் கல்விச் சங்கம், மைலாப்பூர்.

சென்னை ஜார்ஜ் டவுன் நெ. 1, மக்லீன் தெருவு, எவ்வரிமான்ஸ் அச்சுக்கூடத்தில் D. சுந்தர வரதனால் அச்சிடப்பட்டு, சென்னை மைலாப்பூர், பசுபதி அக்கிரஹாரம், நெ. 16, 'தமிழ் உலகு' கார்யாலயத்தில் பத்திராதிபரால் பிரசுரிக்கப்பட்டது.